## தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை – 2014

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவு நிறுவனங்கள் (பதிவு செய்யும் அதிகாரச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென தான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக்கூற்றிலும் நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப் பாய்ச்சுக் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1**

(i) நியமத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிறுவனம் தொடர்ந்து நடாத்திச் செல்லும் இயலுமை தொடர்பாக மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 132(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கு உரித்தான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 108 ஆம் பந்தியின் பிரகாரம் செயலாற்றல் கூற்றிலோ அல்லது குறிப்புக்களிலோ செலவினங்களின் உப வகையொன்றுக்குரிய நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான வகையின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் பதிவுக் கட்டணங்களாக கிடைத்திருந்த ரூபா 16,362,829 ஆன வருமானம் வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 70 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகளை கருத்திற் கொண்டு சொத்தொன்றின் பயன்பாட்டு ஆயுட்காலம் திட்டவட்டமாக குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பான அலுவலக உபகணங்கள் மற்றும் கணனிகளுடன் கூடிய சகல நடைமுறையல்லா சொத்துக்களும் வருடாந்தம் 5 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நேரடியாக வங்கிக்கு கிடைக்கும் பதிவுக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடைமுறையொன்றை இனங்கண்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வங்கிக்கு நேரடியாக கிடைத்திருந்த ரூபா 38,965,990 தொகை இனங்காணப்பட்டு அந்தந்த ஆண்டுகளில் வருமானமாக கணக்கீடு செய்யப்படாதிருந்தமை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் அக்காலப்பகுதியில் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக வாடிக்கையாளரால் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 31,732,395 தொகை வருமானமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அப்பணம் வங்கிக்கு கிடைத்திருக்கவில்லையென 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பதிவுக் கட்டண வருமானமாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 16,362,829 சரியானதென முழுமையானதென மற்றும் நம்பிக்கையானது என்பது தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் முதிர்ச்சியடைந்த திறைசேரி பட்டியல்களிலிருந்து நேரடியாக வங்கிக்கு கிடைத்திருந்த ரூபா 31,839,714 தொகையான பட்டியல் பெறுமதி மற்றும் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பேரவையின் பேரில் பேணப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 13,500,000 தொகை பேரவையின் பெயரிலான சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அக்கொடுக்கல் வாங்கல்களின் செலவுப் பதிவு காசேட்டில் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் அதற்கு சமமான தொகையொன்று நடைமுறைப் பொறுப்பொன்றாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட Fund Transfer பெயருடைய கணக்கில் ரூபா 10,500,000 தொகையான செலவு மீதி மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது வரவு மீதியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. எனினும் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறை எவ்வாறென வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 30,874,170 தொகை நேரடியாக வங்கியால் கொடுப்பனவு செய்து திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அக்கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2007 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வங்கியால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூபா 4,800 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் சீராக்கப்பட்டிருந்த காசேட்டினை விட வங்கியில் குறைவாக காண்பிக்கப்படும் ரூபா 615,000 தொகையான இனங்காணப்படாத மீதி தொடர்பான எதுவித விபரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிக்கவில்லை. மேலும், காசேட்டின் மீதிகள் வங்கி கணக்கிணக்க கூற்றில் குறிப்பிடப்பட்ட காசேட்டின் மீதிக்கு இடையே ரூபா 1,789,524 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | திறைசேரி உண்டியல்கள் | 10,000,000 | திறைசேரி உண்டியல்களின் இலக்கம், வைப்புச் செய்யப்பட்ட திகதி, முதிர்வடையும் திகதி மற்றும் பெறுமதி உள்ளடக்கப்பட்ட பதிவேடு |
| (ஆ) | பெற வேண்டிய திறைசேரி உண்டியல் வட்டி | 1,881,531 | பேரேட்டுக் கணக்கு |
| (இ) | சில்லறைக் காசு செலவினம் | 300,000 | பேரேட்டுக் கணக்கு |
| (ஈ) | திரண்ட நிதியம் | 23,291,120 | பேரேட்டுக் கணக்கு |
| (உ) | பதிவுக் கட்டண வருமானம் | 16,362,829 | பேரேட்டுக் கணக்கு |

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

2008 ஆம் ஆண்டின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மதிப்பிழந்த 06 காசோலைகளின் ரூபா 322,546 பெறுமதியை குறித்த தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் உரிய அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்படாது பேரவையால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 24,085,716 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 384(2) | காசோலைகளின் பாதுகாப்பின் பொருட்டு சகல காசோலைகளும் குறுக்கு கோடிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் குறுக்கு கோடிடப்படாத 2 காசோலைகள் மூலம் ரூபா 128,340 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 388 மற்றும் 389 | மீளாய்வாண்டில் காசோலை கையளிக்கும் பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதி அளவில் காணப்பட்ட ரூபா 1,178,340 கிரயமான நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதி அளவில் காணப்பட்ட ரூபா 2,225,140 கிரயமான கணனிகளுக்காக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதி விளைவுகள் ரூபா 1,170,827 மிகையாக காணப்பட்டதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் போதான மிகை ரூபா 3,851,004 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 2,680,177 ஆல் குறைவடந்திருந்தது. பதிவு கட்டண வருமானம் ரூபா 2,342,256 ஆல் குறைவடைந்திருந்தமை மேற்குறித்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2010 ஆம் ஆண்டில் ரூபா 970,888 ஆன மிகை தளம்பல்களுடன், 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 1,170,827 ஆன மிகையாக இருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை மீண்டும் கருத்திற்கொள்கையில் 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது பேரவையின் பங்களிப்பு முறையே ரூபா 2,530,453 தொகையும், ரூபா 2,721,073 தொகையும், ரூபா 1,201,872 தொகையும், ரூபா 6,171,947 தொகையும் ரூபா 3,739,840 தொகையாக இருந்தமையால். 2010 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டு வரையில் பங்களிப்பு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 7 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது மீண்டும் 56 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டில் மீண்டும் பங்களிப்பு சதவீதத்தினால் 413 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் அது மீண்டும் 39 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்த

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்றுவதற்காக 03 மாதங்களுக்கு குறையாத காலமொன்றுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், பேரவையினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரவையினால் மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமல் இருந்தமையால் சபையின் செயலாற்றல் தொடர்பாக கருத்தினை சமர்ப்பிக்க முடியவில்லை.

(ஆ) 2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 2(1) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து தனியார் மருத்துவ நிலையங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். பேரவை ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை 1,747 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த எண்ணிக்கை 757 வரை அதாவது 57 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இவ்வாறு பதிவு குறைவடைவதற்கான காரணம் அந்த தனியார் மருத்துவ நிலையங்கள் மூடப்படுவதும் இல்லாவிட்டால் பதிவினை பெற்றுக் கொள்ளாமலே

நிறுவனத்தை நடாத்திச் செல்வது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கையை இனங்காண்பதற்கும் பதிவு செய்வதற்கும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் செயற்படுத்துவதற்கு முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை பதிவு செய்யும் சட்டத்தின் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தவறியிருந்தது.

(i) பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவகங்களால் பேணப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்து கண்காணித்தல்

(ii) சகல தனியார் மருத்துவ நிலையங்களாலும் பதவியணியைச் சேர்க்கும் போது ஆகக் குறைந்த தகைமைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி பதவியணியை பயிற்றுவிக்கையில் ஆகக் குறைந்த தரங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(iii) தனியார் மருத்துவ நிலையங்களால் வழங்கப்பட்டு வரும் அல்லது வழங்கப்படும் நோயாளிகளைப் பேணும் சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தல்.

(ஈ) சட்டத்தின் 13(1) பிரிவின் பிரகாரம் சபையின் ஆலோசனையின் பேரில் வர்த்தமானியில் வெளியிடப்படும் நியதிகள் மூலம் அமைச்சரால் தனியார் மருத்துவ நிறுவகங்களிற்காக தரப்படுத்தும் உத்தேச முறையொன்றை படிப்படியாக குறிப்பிட்டு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பேரவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் போதுமானதன்மை இனங்காணப்பட்டு அதற்கு ஈடாகும் வகையில் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் 2012 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் 2013 ஆம் ஆண்டின் போது கணக்கீட்டு உதவியாளர் ஒருவரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை பதிவு செய்யும் சட்டத்தின் 7(1) உப பிரிவின் பிரகாரம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை கூட்டிணைக்கப்பட்ட பேரவையொன்றாக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து அவ்வாண்டு முடிவடைந்ததன் பின்னர் 04 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பேரவையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மூன்று வருட காலதாமதத்தின் பின்னர் 2018 யூலை 13 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டில் பேராவையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

**5.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரவையினால் பேரவையில் புதிதாக பதிவு செய்யப்படும் சகல தனியார் மருத்துவ நிறுவனங்களில் காட்சிப்படுத்துவதற்காக புதிய பெயர் பலகையொன்று வழங்கப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1 ஆம் பந்தியின் பிரகாரம் முதலாவது ஒப்பந்தம் வழங்கும் திகதி முதல் 6 மாத காலம் கழியாதிருக்கையில் ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதமான எல்லை வரை மாத்திரம் பொருட்கள் கொள்வனவிற்காக மீண்டும் கட்டளையிட முடியும். எனினும் அந்த இரண்டு வரையறைகளையும் மீறி முதலாவது ஒப்பந்தத்தை வழங்கிய திகதியான 2013 ஒக்தோபர் முதல் 6 மாத காலம் கடந்ததன் பின்னர் அதாவது 2014 யூன் மாதம் 01 ஆந் திகதி மீண்டும் கேள்வி கோராமல் அதே வழங்குனரிடமிருந்து மீண்டும் கட்டளையிட்டு ஒன்று ரூபா 2400 வீதம் சிறிய அளவிலான 200 பெயர்ப் பலகைகளும், ஒன்று ரூபா 2,900 வீதம் நடுத்தர அளவிலான 100 பெயர்ப் பலகைகளும் கொள்வனவு செய்வதற்கு ரூபா 770,000 செலவு செய்யப்பட்டிருந்தன.

(இ) வருடாந்த பதிவினை புதுப்பிக்கும் போது பதிவில் புதிய ஆண்டினைக் குறிப்பிட்டு பழைய பெயர் பலகைகளுக்கு புதிய பகுதியொன்றை இணைத்து பெயர் பலகைகளை மீண்டும் தயாரிப்பதற்கு (Refill) நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 09 சந்தர்ப்பங்களில் 838 பெயர் பலகைகளை மீண்டும் தயாரிப்பதற்காக (Refill) ரூபா 800,180 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பதிவினை புதுப்பித்திருந்த தனியார் மருத்துவ நிறுவனங்களின் பழைய பெயர் பலகைகளை மீண்டும் தயாரிப்பதற்காக (Refill) புதிய பெயர் பலகைகளை வழங்கிய வழங்குனரால் 2 சந்தர்ப்பங்களில் கீழே விபரிக்கப்பட்ட வகையில் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிந்தன.

| **பெயர் பலகை வகை** | **2012 யூன் 07 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலை** | **2012 யூன் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலை** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பெரிய | 1250 | 1050 |
| நடுத்தரம் | 990 | 900 |
| சிறிய | 850 | 820 |

எனினும் ஏனைய நிறுவனங்களிலிருந்து இதற்காக கேள்வி கோரப்பட்டமைக்காக அல்லது கூறு விலை சமர்ப்பட்டதை உறுதிப்படுத்த எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 யூன் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூறுவிலையின் கீழ் 09 சந்தர்ப்பங்களில் கூடிய கேள்வியின் கீழ் மாத்திரம் பெயர் பலகைகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அதன் பிரகாரம் ஒன்று ரூபா 30 வீதம் 487 சிறிய பெயர் பலகைகளுக்காக ரூபா 14,610 தொகையும் ஒன்று ரூபா 90 வீதம் 202 நடுத்தர பெயர் பலகைகளுக்காக ரூபா 18,180 தொகையும் ஒன்று ரூபா 200 வீதம் 149 பெரிய பெயர்

பலகைகளுக்காக ரூபா 29,800 தொகையுமாக மொத்தம் 838 பெயர் பலகைகளுக்காக ரூபா 62,900 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1 ஆம் பந்தியின் பிரகாரம் முதலாவது ஒப்பந்தம் வழங்கும் திகதி முதல் 6 மாத காலம் கழியாதிருக்கையில் ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதமான எல்லை வரை மாத்திரம் பொருட்கள் கொள்வனவிற்காக மீண்டும் கட்டளையிட இயலுமை காணப்படுகின்றது. எனினும் அந்த இரண்டு வரையறைகளையும் மீறி முதலாவது ஒப்பந்தத்தை வழங்கிய திகதியான 2013 யூன் முதல் 6 மாத காலம் கடந்ததன் பின்னர் அதாவது 2014 சகவரிமுதல் 09 சந்தர்ப்பங்களில் 838 பெயர்ப் பலகைகளை மீண்டும் தயாரிப்பதற்காக ரூபா 800,180 செலவு செய்யப்பட்டிருந்தன.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் போதுமானதன்மை இனங்காணப்பட்டு அதற்கு ஈடாகும் வகையில் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கணக்கீடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிச் செல்லாமை மற்றும் காசேட்டினை பேணுவதில் பலவீனம் காணப்பட்டமை வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களை தயாரிப்பதில் தாமதம் காணப்படல், தாமதமாக தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கம் சரியாக தயாரிக்கப்படாமை, சகல பேரேட்டுக் கணக்குகள் சரியாக தயாரிக்காமை மற்றும் சில கணக்குப் பேரேடுகளிலிருந்து விடுபட்டிருந்தமை. |